**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 173/2019**
**PROSECUTION WITNESS NO. 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : நிறைமதி | **Caste** | : |
| **Husband Name** | : சுப்ரமணியன் | **Religion** | : **Hindu** |
| **Village** | : தஞ்சாவூர் | **Calling** | : தலைமைக்காவலர் **2469** |
| **Taluk** | : தஞ்சாவூர் | **Age** | : **42/2023** |

**(Accused 1 to 3 absent. Petition U/s. 317(1) CrPC filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திருமதி. எம். உதயராணி, தட்டச்சர்**

**C.C.No. 173/2019 04.08.2023** **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 04.15**

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது தஞ்சாவூர் நகர கிழக்கு காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.02.2019 ஆம் தேதி நான் தஞ்சாவூர் நகர மேற்கு காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது நானும், நிலைய உதவி ஆய்வாளர் திருமதி. தமிழ்செல்வி, சிறப்பு உதவி ஆய்வாளர்கள் 355 அண்ணாதுரை மற்றும் 2007 விஸ்வநாதன் ஆகியோருடன் பழைய பேருந்து நிலையத்தில் பகல் 01.00 மணியளவில் ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது பேருந்து நிலையத்தில் கும்பகோணம் மார்க்கமாக செல்லும் பஸ் நிறுத்தத்தில் 3 நபர்கள் நின்றுக் கொண்டு துண்டு பிரசுரம் மற்றும் கட்டையுடன் பொதுமக்களிடம், ”ஜனநாயக ஆட்சியா என்றும், பாசிச கார்ப்பரேட் ஆட்சியை கண்டித்து" பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பிரசுரங்கள் அளித்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

2. பணியில் இருந்த நாங்கள் உதவி ஆய்வாளர் அவர்களை விசாரித்தார். அப்போது அந்த நபர்கள் நீங்கள் யார் எங்களை கேட்பதற்கு, அருகில் வந்தால் கட்டையால் தாக்கி தீ வைத்துவிடுவதாக மிரட்டினார்கள். பின்னர் உதவி ஆய்வாளர் அவர்களிடம் காரணம் கூறி கைது செய்வதாக தெரிவித்தார். சம்பவயிடத்திலேயே சிறப்பு உதவி ஆய்வாளர்கள் அண்ணாதுரை மற்றும் விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். பின்னர் எதிரிக ள் ராஜேந்திரன், பால்ராஜ் மற்றும் மதுரைவீரன் ஆகியோர் மக்கள் அதிகாரம் என்ற கட்சியை சேர்ந்தவர்களாக தெரிவித்தனர். பின்னர் எதிரிகளையும் தடயப்பொருட்களையும் நிலையம் கொண்டு வந்து எதிரிகள் மீது கு.எண்.100/2019 சட்டப்பிரிவு 505(i)(b), 353, 506(ii) இதசவின் படி வழக்கு பதிவு செய்வதற்கு உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**C.C.No. 173/2019 04.08.2023**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**3.** சம்பவயிடம் மக்கள் நெருக்கடி நிறைந்த பகுதி என்றால் சரிதான். பொதுமக்கள் யாரிடமும் புகார் பெறப்படவில்லை என்றால் சரிதான். பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. சம்பவயிடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு சுமார் 1 1/2 கி.மீ. தூரம் இருக்கும். எதிரிகள் வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவயிடம் பழைய பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நிற்கும் இடத்திற்கு அருகேயுள்ள நடைமேடை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகே தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சேவை மையம் உள்ளது என்றால் சரிதான்.

4. சம்பவசமயத்தில் எதிரிகள் யாரையும் தாக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடமிருந்து தீ வைப்பதற்கான பொருட்கள் ஏதேனும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. சம்பவயிடம் எத்தனையாவது வழித்தடம் என்று வாக்குமூலத்திலும் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாக்குமூலத்திலும் முதல் விசாரணையிலும் எந்த எதிரி யாரை நோக்கி மிரட்டினார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவயிடத்திற்கு அருகேயுள்ள நபர்கள் சாட்சியாக இருக்க முன்வராததால் காவலர்கள் மகஜர் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான்.

5. மகஜர் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சம்பவயிடத்தில் தயார் செய்யப்பட்டது. மகஜர் தட்டச்சு செய்யப்பட்டுள்ள மாதிரி படிவம் கையால் எழுதுவோம், சம்பவசமயத்தில் மேற்படி மாதிரி படிவம் வைத்திருந்தோம். அரசின் தூண்டுதலின் பேரில் எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் சம்பவ நேரத்தில் சம்பவயிடத்தில் இல்லை என்றும், எதிரிகளை வேறு இடத்தில் கைது செய்து, உண்மைக்கு மாறான தகவல்களை சாட்சியமாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.